**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.104/2015**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராம்பிரபு | மதம் | : இந்து |
| த/பெ | : சண்முகம் | ஜாதி | : -- |
| வயது | : 34 | கிராமம் | : திருமழிசை |
| தொழில் | : சுயதொழில் | வட்டம் | : பூந்தமல்லி |

**15.10.2025**
**பி.வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 4ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். இந்நீதிமன்ற அ.வ.எண்.23/2010ன் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தீர்ப்பாணை பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 27.06.1986ம் தேதியிட்டு என் பெரியம்மா தேவகிக்கு அவரது கணவர் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தேவகி இறப்பு சான்று தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்று பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தேவகி வாரிசு சான்று தாக்கல் செய்கிறேன். **(வாரிசு சான்று பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.944ல் என் அப்பா சண்முகம் பெயரில் உள்ள கூட்டு பட்டா தாக்கல்

செய்கிறேன். **(கூட்டு பட்டா பி.வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.944ல் தேவகி பெயரில் உள்ள நில உரிமை பதிவேடு (பட்டா பாஸ்புக்) தாக்கல் செய்கிறேன். **(நில உரிமை பதிவேடு (பட்டா பாஸ்புக்) பி.வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)